**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.117/2018**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | புஸ்பாமணி(PW1) | | |
| Husband's Name | பழனிச்சாமி | Calling | |
| Village | முதலிபாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of March 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி ஆஜர்

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தைப் பற்றி என் கணவரின் மாமன் மகன்தான் சம்பவத்தை பற்றி சொன்னார். காலம் சென்ற என் கணவருக்கு வெளிப்புறமான காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான் வலது காலில் மட்டும் சிறிய அளவில் சாறு காயம் இருந்தது. என் கணவர் அவரின் சித்தி வீட்டில் சம்பவத்திற்கு பின்னிட்டு இருந்து கொண்டார். சம்பவத்திற்கு பின்னிட்டு நன்றாக தான் இருந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்றால் இல்லை நன்றாக தான் இருந்து வந்தார். விபத்திற்கு பின்னிட்டு மறுநாள் தான் நெஞ்சு வலியும் வயிற்று வலியும் இருந்ததாக சொன்னார். மேற்படி விபரமும் என் கணவர் அவர் சித்தி வீட்டில் சொன்ன பின்னிட்டு தான் தெரியும் என்றால் சரிதான். என் கணவர் இறந்ததற்கு நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பணம் இன்னும் பெறவில்லை. என் கணவர் தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டு கீழே விழுந்துவிட்டார் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தண்ணி லாரி வந்து மோதி விட்டதில் விபத்து ஏற்பட்டது என்று என்னிடம் சொன்னார்கள். யார் யார் சம்பவத்தை பார்த்து என்னிடம் நேரடியாக சொன்னார்கள் என்று என்னால் சொல்ல முடியும் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என் கணவர் தான் தனக்கு தானே விபத்து ஏற்படுத்திக் கொண்டார் என்றும் உண்மையை மறைத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக தண்ணி லாரி தான் அந்த விபத்திற்கு காரணம் என்று பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |